நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

## ஆழத்து முத்துக்கள் 08

# அண்ணாவியார் ஆசீர்வாதம்


யாழ் நகரின் வடமேற்கு எல்லைக் கிராமம், கடலோரக் கிராமம். கத்தோலிக்க மரபு தென்மோடி நாட்டுக்கூத்தை வளர்த்தெடுத்த மண், நாவாந்துறை மண். அண்ணாவியார் ஆசீர்வாதம் அந்த மக்கள் கலையைப் பேணிக்காத்து அடுத்த சந்ததியிடம் கையளித்த பேராளன். ஆண்டுதோறும் அம்மண்ணில் கோவில் கொண்ட பரலோக அன்னையின் திருநாளில், ஆவணி 15ம் நாள், நாட்டுக் கூத்து அரங்கேறத் தவறியதில்லை. ஈழத் தமிழரின் பாரம்பரிய தென்மோடிக் கூத்து வடிவம் கத்தோலிக்க மதத்தின் தாக்கத்தினால் ஆட்டம் குறைவடைய பாடல்கள் மே லோங்கிய ஓர் மருவிய வடிவமாக மாறி கத்தோலிக்க கிராமங்கள் எங்கும் பேணிப் பாதுகாக்கப்பட்டது. இக்கூத்து அக்கிராமங்களில் கத்தோலிக்க மத நம்பிக்கைகளை வளர்த்தெடுக்கும் முறைசாரா கல்விமுறையும் ஆயிற்று. மிகக் கடினமான மொழிநடையும், கவித்துவமும் மிக்க பாடல்களை சாதாரண மக்களுக்குக் கற்பிக்கும் கல்விமுறையும் ஆயிற்று. ஆண்ணாவியார் ஓர் பேராசானாயினார். அண்ணாவி மனவல் ஆசீர்வாதத்திடம் அந்த ஆசிரியத்துவம் மிகுந்திருந்தது. கட்டுப்பாடும் நிர்வாகத்திறனும், எடுத்த காரியத்தை முடிக்கும் மன ஓர்மம் கொண்ட கடின உழைப்பும், தியாகமும் அவர் ஆசிரியத்தின் அடிப்படைகளாயிருந்தன.

யார் இந்த அண்ணாவியார்?

ஆசிர் அண்ணன், கட்டையர் ஆசீர்வாதம் என அன்பாக அழைக்கப்பட்ட, ஊரவரால் மதிக்கப்பட்ட ஓர் அடக்கமான மனிதன். நாட்டுக்கூத்தில் மட்டுமல்லாது நாவாந்துறை வாழ்வியலின் எல்லா அம்சங்களிலும் தன் ஆளுமையைப் பதித்தவர். இவர் சிறந்த தொழிலாளி. நுட்பமான கைவினைஞர். ஓர் அண்ணாவி தனித்து ஓர் கலைஞனாக மட்டுமல்லாது, சமூகத் தலைவனாக, சமூக உருவாக்கத்தின் ஊக்கியாக இருக்கின்றான் என்பதற்கு மனவல் ஆசீர்வாதம் ஓர் சான்றாவார்.

1912ஆம் ஆண்டு பிறந்ததிலிருந்து 1995ம் ஆண்டு இறக்கும் வரை பெரும்பாலான காலங்கள் நாவாந்துறையிலேயே வாழ்ந்தார். 1950களின் நடுப்பகுதியில் இம்மனுவல் நாட்டுக்கூத்தை தனது முதலாவதான படைப்பாகவும், 1990களின் முற்பகுதியில் கற்பலங்காரி நாட்டுக்கூத்தை இறுதியான படைப்பாகவும் அரங்கேற்றினார்.

தன் முன்னோரால் தனக்கு வழங்கப்பட்ட கலைவடிவத்தினை அடுத்த சந்ததிக்கும் கையளித்து புதிய தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கினார். 50 களிலிருந்து 80கள் வரை வருடம் தவறாது ஒவ்வொரு வருடமும் இவரின் நெறியாள்கையில் நாட்டுக்கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. மிகச் சிறப்பாக பேசப்பட்ட இவர் படைப்புக்கள் மற்றக் கிராமங்களிலும் இவரால் மேடையேற்றப்பட்டன. இம்மனுவல், அலசு நாடகம், ஆனந்தசீலன், செபஸ்தியார் நாடகம், தேவசகாயம்பிள்ளை, ஊசோன் பாலந்தை, மனம் போல் மாங்கல்யம், பூதத்தம்பி, எஸ்தாக்கியார் நாடகம் போன்றன



இவரால் நெறியாள்கை செய்யப்பட்ட கூத்துக்களில் சிலவாகும்.

மக்கள். பாடல்களைப் பகுத்து அவற்றின் கருத்துக்களை இலகுவில் மனதில் பதிய வைத்தலில் அண்ணாவி ஆசீர்வாதம் கைதேர்ந்தவர். சொற்களைத் தெளிவாக உச்சரிப்பதை மிகவும் வலியுறுத்துபவர். நாட்டுக் கூத்து வசனங்களை நவீன நாடக உரையாடல் போன்று சொல்வதை அண்ணாவியார் ஆசீர்வாதம் வெறுத்தார். நாட்டுக்கூத்து வசனங்கள் கூத்து முறையில் சொல்லப்பட வேண்டுமென வலியுறுத்துவார். இசைநாடகத்தின் தாக்கத்தினால் பாடல்களை நீட்டி இழுத்துப் பாடுவதை சில நடிகர்கள் விரும்பினார்கள். ஆனால், அண்ணாவியார் ஆசீர்வாதம் கூத்தை, அதன் தனித்துவத்தை பேண வேண்டுமென வலியுறுத்தினார். நாட்டுக்கூத்து மெட்டுக்களை கர்நாடக சங்கீத இராகங்களினாலும், தாளங்களினாலும் வரையறை செய்வதுடன் இவர் உடன்படவில்லை. சில கூத்துக்கள் அச்சுப்பதிக்கப்பட்டபோது இது இடம்பெற்றது. பொதுவாக கூத்து மெட்டுக்கள் பழைய பிரபலமான கூத்து மெட்டுக்களிலிருந்தே வரையறுக்கப்படும். தேவசகாயம் பிள்ளை கூத்தின் மெட்டுக்களையே நியமமாக அண்ணாவி ஆசீர்வாதம் பாவிப்பார். கூத்து ஒத்திகையின்போது இவர் மிக நிதானமாகவும் அதேவேளை கட்டுக்கோப்பாகவும் நடிகர்கள் நடந்துகொள்வதை வலியுறுத்துவார். இவர்மீது மதிப்பும் மரியாதையும் கொண்டவர்களாக நடிகர்கள் இருந்தார்கள்.

ஓர் நேர்மையான கலைமகன், கலையை நேசிப்பவன் அதனால் அக்கலையை வளர்க்கும் மக்களை நேசிக்கின்றான். மக்களும் அவனை நேசிக்கின்றனர். இதுவே அண்ணாவி ஆசீர் வாதத்தின் தனித்துவமாகும்.

மேடையேற்றத்தின் காட்சிகளுக்கிடையில் நீண்டநேரம் எடுக்காதிருக்க வேண்டுமென்பது அண்ணாவியார் ஆசிர்வாதத்தின் கொள்கை. இவர் கூத்தில் எந்தப்பாத்திரமும் ஏற்பதில்லை. முழுமையாக நெறியாள்கையிலேயே ஈடுபடுவார். கூத்து தொடங்கி முடியும்வரை மேடையைவிட்டு அகலமாட்டார். தனக்கென சிலரை உதவிக்கு வைத்திருப்பார். பிற்பாட்டுக்காரர் வாத்தியக்காரரோடு கொப்பி பார்ப்பவரையும் வைத்துக்கொள்ளுவார்.

ஒவ்வொரு காட்சிக்கு முன்பும் தன்னிடமுள்ள ஊதி (Whistle) மூலம் ஒலியெழுப்பி திரைச்சீலை இழுப்பவரையும் மற்றோரையும் உடனடியாக செயற்பட வைப்பார். கூத்து முடிந்து, மங்களம் பாடியபின் கோவிலுக்கும், வீடுகளுக்கும் சென்று சில பாடல்களைப் பாடுவார்கள்.

அண்ணாவி ஆசீர்வாதம் தனித்து கூத்தில் மட்டுமல்லாது பசாம் (Psalm) எனும் யேசுவின் திருப்பாடுகளின் பாடல்களையும் பழக்குவார். பெரியவெள்ளியன்று யேசுவைச் சிலுவையிலறைந்து கொன்ற நாளன்று ஊரே துக்கித்திருக்கும். கோவிலிருந்து உச்சத்

### பீற்றர் மனுவல்பிள்ளை

தொனியில் பிரசங்கங்கள் பாடப்படும். பசாம் பாடுவதற்கென ஓர் தனித்துவமான முறையுண்டு. கேட்பவர் உள்ளத்தை உருக்கும் யேசுவின் திருப்பாடுகளின் துயரங்கள் இசையூடு ஊர்க்காற்றில் நிரம்பும். ஒப்பாரி மற்றுமொரு கலைவடிவம். மரணவீடுகளில் உடலத்தைச் சுற்றி விழித்திருக்கும் உறவுகளோடு விழித்திருந்து விடிய விடிய கலைஞர்கள் ஒப்பாரி பாடுவர். அண்ணாவி ஆசீர்வாதம் ஒப்பாரிப்பாடல்களையும் கலைஞர்களுக்கு பழக்குவார்.

நாட்டுக்கூத்து மக்கள் கலை, மக்கள் வளர்த்த கலை. அவற்றை பேணிக்காத்து அடுத்த சந்ததிக்கு ஒப்படைப்பதில் அண்ணாவியின் பங்கு அளப்பரியது. ஆசீர்வாதம் அண்ணாவியாரால் உருவாக்கப்பட்ட பல கலைஞர்கள் இன்றும் அதனை பேண முயற்சிக்கிறார்கள். புலம்பெயர்வும், வேரறுந்தவாழ்வும், அடக்கு முறையும் இம்மக்கள் கலையை அழியச் செய்யுமா பேணிக்காக்குமா அல்லது புதுப் பரிமாணத்துடன் நவீனமயமாக்கப்படுமா?.

■ ■ ■

www.thaiveedu.com